

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., தமது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றார்.

# 2013 வழக்கில் டி.எம்.செல்வகணபதி எம்.பி. உள்ளிட்டோர் விடுதலை!

## 13 ஆண்டுகளுக்குப் பிறகு சேலம் நீதிமன்றம் தீர்ப்பு!



சேலம், ஆக. 27 -

கடந்த 2013ஆம் ஆண்டு ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது நடைபெற்ற சம்பவம் தொடர்பாக, தி.மு.க. சேலம் மேற்கு மாவட்டச் செயலாளரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். செல்வகணபதி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில், அனைவரையும் விடுதலை செய்து சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்-1 உத்தரவிட்டுள்ளது.

ஏற்காடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின்போது கத்திரிப்பட்டி பகுதியில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. நிர்வாகிகளுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அப்போது அங்கு சென்ற டி.எம். செல்வகணபதி, பிரச்சினையைத் தடுத்து நிறுத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அ.தி.மு.க. நிர்வாகிகளை காயப்படுத்தியும் கொடூர ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், டி.எம். செல்வகணபதி, முன்னாள் சேர்மன் விஜயகுமார், முன்னாள் தலைவர் கோபு (எ) தங்கதுரை, மோகன் கவுன்சிலர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் மீது சேலம் வீராணம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கு கடந்த 13 ஆண்டுகளாக சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்-1ல் நடைபெற்று வந்த நிலையில், இறுதி விசாரணை நிறை வடைந்தது. குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்கை விசாரித்த நீதிமன்றம் டி.எம். செல்வகணபதி உள்ளிட்ட குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

இதன்மூலம், 2013ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கு 13 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்ற விசாரணையின் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.



நாகை மாவட்டம் நாகை நகர வார்டு கழக செயலாளர்கள், வார்டு கழக பிரதிநிதிகள் கூட்டம் நகர தி.மு.க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன், நகரக் கழக அவைத்தலைவர் இரா.முருகையன்,துணை செயலாளர்கள் வெற்றிலை கடை எஸ். சிவா, பி.திலகர், பொருளாளர் அபுபக்கர், மாவட்டப் பிரதிநிதி ஆர்.ரமணி மற்றும் பலர் உள்ளனர்,

# திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, ஆக.27

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழகக் கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

*30.08.2026* ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத் திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், ஆகஸ்ட்22 அன்று கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதி க்கப்படவுள்ளது.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, முன்னாள், இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மேலும் ஒரு திட்டத்திற்கு 'ஸ்டிக்கர்' ஒட்டி இருக்கும் த.வெ.க. அரசு

# கட்டணமில்லாப் பேருந்துச் சலுகையை மாற்றுத்திறனாளிகளுக்கும் கொடுத்தால் நட்டம் ஆகி விடுமா?

## கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் கேள்வி!



சென்னை, ஆக. 27 -

கழக மாற்றுத் திறனாளி அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 24.08.2026 திங்கட்கிழமை 110 விதியின் கீழ் அறிவிப்புகளை வெளியிட்ட முதலமைச்சர் திருவாளர் ஜோசப் விஜய் அவர்கள் இப்போது வழக்கத்தில் இருக்கும் மகளிர் கட்டணம் இல்லா பேருந்து திட்டத்தில் எஸ் எஸ் மற்றும் டீலக்ஸ் பேருந்துகளிலும் மகளிர் கட்டணமின்றி பயணிக்கலாம் என்ற அறிவிப்பை வழக்கம் போல கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களின் பெயர் மாற்றும் வரிசையில் விடியல் பயணம் என்ற கழக கொண்டு வந்த திட்டத்திலன் மீது தனது ஸ்டிக்கரை ஒட்டி வெற்றி பயணம் என்று அறிவித்திருக்கிறார் வரவேற்கிறோம்.

ஆனால் உண்மையில் தவெக வின் தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டது என்ன..? தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லா பேருந்துகளிலும் மகளிர் இலவசமாக பயணிக்கலாம் என்று தானே சொல்லப்பட்டது. உதாரணத்திற்கு சென்னையில் இருந்து திருச்சி செல்ல திருச்சியிலிருந்து மதுரை செல்ல மதுரையில் இருந்து கன்னியாகுமரி செல்ல கன்னியாகுமரியில் இருந்து சென்னை வர ஆக மொத்தம் எங்கு பயணித்தாலும் மகளிருக்கு அரசு பேருந்துகளில் இலவசம் என்ற பொருளில் தானே தேர்தல் வாக்குறுதியாக சொன்னார் திருவாளர் விஜய். உண்மை இப்படி இருக்க இன்று ஏற்கனவே கழக தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலே கொண்டுவரப்பட்டு இன்று வரை வழக்கத்தில் இருக்கும் அதே திட்டத்தில் கூடுதல் பேருந்துகளை மட்டும் சேர்த்து பெயர் மாற்றி புது அறிவிப்பு போல் அறிவித்திருப்பது நியாயம்தானா..?

சரி எல்லா சிறு விவசாய கடன் தள்ளுபடி என்று சொல்லி ஏமாற்றியது போல், மாதம் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று சொல்லி ஏமாற்றியது போல், எல்லா குடும்ப அட்டைக்கும் வருடத்திற்கு 6 சிலிண்டர் என்று சொல்லி இன்று வருடத்திற்கு இரண்டரை லட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் அதாவது மாதம் 20,833 ரூபாய்க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு மட்டும் ஆண்டுக்கு மூன்று சிலிண்டர் வழங்கப்படும் என்ற ஏமாற்று வேலை போல், இந்த அறிவிப்பையும் எடுத்துக் கொள்கிறோம் ஆனால் அந்த அறிவிப்பில் மாற்றுத் திறனாளிகள் என்று ஒரு சமூகம் இருக்கிறதே அது கொஞ்சமாவது இந்த அரசுக்கு முதலமைச்சருக்கு ஞாபகத்துக்கு வரவில்லையா?

மாற்றுத்திறனாளிகள் நாங்கள் பயணிக்க வேண்டாமா..?பிரிக்க முடியாதது மாற்றுத்திறனாளிகளும் வறுமையும் என்பது போல் சமூகத்தில் விளும்பு நிலையில் வாழும் பின்தங்கியவர்களான மாற்றுத்திறனாளிகள் எங்களை கொஞ் சம் யோசிக்காத முதலமைச்சர் என்று நினைக்கும் போது மனம் வேதனை அடைகிறது.

இரண்டு கம்பு வைத்து காலில் கேலிபர் போட்டு நடக்க முடியாமல் நடந்து வரும் மாற்றுத் திறனாளிகள். குறுக்கு இடுப்பு எலும்பு உடைந்து போகிற அளவுக்கு சாய்ந்து தாங்கி தாங்கி ஒரு கால் வைத்து நடந்து வரும் மாற்றுத்திறனாளிகள். வாழ்க்கையே இருட்டு தான் என்றாலும் கூட தங்கள் தன்னம்பிக்கையால் இந்த உலகத்தை பார்க்கும் பார்வை மாற்றுத் திறனாளிகள். மற்றவரிடம் பேசாத வரை மற்றவர் தங்களை அணுகாத வரை தனக்கு ஊனம் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் சமூகத்தில் வாழும் பேச முடியாத காது கேட்க முடியாத மாற்றுத்திறனாளிகள். மனவளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்நிலைமையோ இன்னும் துயரம் அந்த குழந்தைகளை பராமரித்து அல்லல்படும் பெற்றோர்களின் நிலைமை வார்த்தைகளால் சொல்ல முடியாதது. ஆட்டிசம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடைய பிரச்சினைகளை சொல்ல முற்பட்டால் ஒரு இன்சைக்கிளோபீடியாவே போடலாம் அவ்வளவு வாழ்க்கை சிக்கல் மேற்குறிப்பிட்ட மாற்றுத்திறனாளிகளின் கிராமப்புறங்களில் இருக்கக்கூடியவர்களின் நிலைமை பரிதாபத்திற்குரியது அரைகுறை அறிவிப்பாக இருந்தாலும் இன்றைய அறிவிப்பில் இப்படிப்பட்ட மாற்றுத்திறனாளிகளையும் மனதில் கொண்டு அவர் நலனில் கவனம் செலுத்தி மாற்றுத் திறனாளிகளுக்கும் அவர்களை பராமரிப்பவர்களுக்கும் அல்லது துணையாய் வருபவர்களுக்கும் கட்டணம் இல்லை என்று அறிவித்திருந்தால் போக்குவரத்து கழகத்திற்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டு விடுமா..? இது போன்ற விளிம்பு நிலையில் வாழும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பேருந்துகளில் சலுகை காட்டாமல் எம்எல்ஏக்களுக்கு காரும் மாதம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் பராமரிப்பு மற்றும் உதவியாளர் படியும் அறிவிப்பது எந்த விதத்தில் நியாயம் இது மிகப்பெரிய சமூக அநீதி இல்லையா..?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி மனுத் தாக்கல் செய்ய அவகாசம்!

## முதலமைச்சர் – அமைச்சருக்கு உயர்நீதிமன்றம் எச்சரிக்கை!

சென்னை, ஆக. 27 -

தேர்தல் வழக்கை நிராகரிக்க கோரி மனுத்தாக்கல் செய்ய அவகாசம் கோரிய முதலமைச்சர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தரப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக முதல்வர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் மற்றும் வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இதேபோல் திருச்சி கிழக்கு தொகுதியில், விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குகள் நீதிபதி வி. லட்சுமிநாராயணன் முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் வழக்குகளை நிராகரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதற்கு இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்க வேண்டும் என, முதல்வர் விஜய் தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது.

இதேபோல, ஆதவ் அர்ஜூனா தரப்பிலும் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்ய இருப்பதாகவும், அதற்கு அவகாசம் வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இரண்டு வார கால அவகாசம் வழங்க மறுத்த நீதிபதி, ஆகஸ்ட் 27 ஆம் தேதி வரை அவகாசம் வழங்கினார்.

அதற்குள் நிராகரிப்பு மனு தாக்கல் செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என முதல்வர் விஜய், அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ஆகியோருக்கு நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.




கழகத் தலைவர் "மு.க.ஸ்டாலின் தாத்தாவின் அன்பு பரிசு என்ற தலைப்பில் கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, நந்தா நகர் பகுதிக் கழகம் சார்பில் பகுதி கழக பொறுப்பாளர் எஸ்.எம்.சாமி ஏற்பாட்டில் 57ஆ வது வட்ட கழகத்திற்குட்பட்ட மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் பயிலும் 250 மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் வழங்கினார். உடன் வட்டக் கழக பொறுப்பாளர்கள் மாரிமுத்து, சண்முகம், சரவணன் உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவாரூர் மாவட்ட முரசொலி மூத்த செய்தியாளரும், மாவட்ட இலக்கிய அணியின் துணை அமைப்பாளருமான ப. ஜாகிர் உசேன், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திருவாரூரில் உருவாக்கித்தரப்பட்ட இந்தியாவின் பெருமை மிக்க தமிழ்நாடு மத்தியப்பல்கலைக் கழத்தில், "கல்வெட்டியல் மற்றும் மரபுமேலாண்மை ஆராய்ச்சி படிப்பில் தேர்ச்சிபெற்று, மாண்பமை இந்தியக் குடியரசுத்துணை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், மேதகு தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் ஆகியோர் பங்கேற்ற விழாவில், பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கோ.பத்மநாபன் அவர்களிடம் பட்டயம் பெற்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கற்கோவில் இரா. இராமதாசு
### ஆகஸ்ட் 27 (2017)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**